நமது அவசரத் தேவைகள்

2. தமிழ் வளர்ச்சி

106

நமது அவசரத் தேவைகள்

2. தமிழ் வளர்ச்சி

Dr. V. C. குழந்தைசாமி

விட்டன. உயர்கல்வி மட்டத்தில், பயிற்றுமொழியாக 1947-48-ல், தமிழ், சேலம் நகராண்மைக் கல்லூரியிலும், கோவை அரசினர் கல்லூரியிலும், இடைநிலை வகுப்புக்கு (Intermediate) பயன்படுத்தப் பட்டது. அதற்குப்பின் முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. நாம் வாழும் இந்த அறிவியல் யுகத்தில், இந்த முப்பது ஆண்டுகள் நீண்ட காலமாகும். இன்றுவரை "பயிற்றுமொழி" ஸ்தானத்தில், தமிழ் அடைந்துள்ள வளர்ச்சி நமக்கு நிறைவு தருவதாக இல்லை. ஆறுதல் அளிப்பதாகவாவது இருக்கிறதா என்பது ஆய வேண்டிய ஒன்று.

அரசு மட்டத்தில், தமிழை ஆட்சிமொழியாக ஆக்கும் முயற்சி, திருச்சி மாவட்ட அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியாகப் பயன்படுத்தப்படும் என்ற ஆணையுடன் தொடங்கி, சுமார் 30 ஆண்டுகள் ஆகின்றன. இன்று அரசின் அன்றாட நடைமுறைகளில் எத்தனை கோப்புகளில் குறிப்புகள் தமிழில் எழுதப்படுகின்றன; ஆணைகள் தமிழில் பிறப்பிக்கப்படுகின்றன; கடிதப் போக்குவரத்துக்கள் தமிழில் நடைபெறுகின்றன என்பதை எண்ணினாலும், அவ்வளவாகத் திருப்தியடைய இயலவில்லை.

எனவே, மொழித்துறையில் நமது கடந்த கால முயற்சிகளையும், முன்னேற்றத்தையும் இன்றைய நிலையையும், எதிர்காலச் செயல் முறைகளையும், உணர்ச்சி வழி அணுகாது, அறிவுவழி நின்று ஆய்வது தேவையான ஒன்றாகும். ஆக்க பூர்வமான முன்னேற்ற முயற்சிகட்கு அது முதல்படியாகும்.

2. பாதுகாப்பு வேறு; வளர்ச்சி வேறு

கடந்த நாற்பது ஆண்டுகளாக, தமிழ் வளர்ச்சிபற்றி நாம் எழுதிய கட்டுரைகள், நிகழ்த்திய சொற்பொழிவுகள், மக்கள் மன்றத்தில் பரப்பியகருத்துக்கள் ஆகியவற்றை அமைதியாக ஆராய்வோமானால், இவை பெரும்பாலும் "பாதுகாப்பு" முயற்சிகளாக, மற்ற மொழிகளின் ஆதிக்கத் தடுப்புப் போராட்டங்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இரண்டாவதாக, இம்முயற்சி, அரசியல்வாதிகள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், அவற்றுடன் தொடர்பு கொண்ட தமிழறிஞர்கள் மட்டத்தோடு நின்றிருப்பதையும், பல்வகை அறிவுத் துறையினர், இன்னும் சொல்லப்போனால், செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்ட அரசு அதிகாரிகள் கூட, தாமரை இலைத் தண்ணீர்போல, ஈடுபாடற்ற நிலையில் செயல்பட்டு வந்திருப்பதையும் காணலாம். அறிவியல் அறிஞர், பொறியியல் வல்லுநர், மருத்துவத்துறையினர், வேளாண்மை விற்பனர் என்ற தரத்தில் உள்ள தமிழர்கள் ஈடுபாடு இதில் கனிசமாக இருந்ததில்லை. காரணம், பாதுகாப்பு முயற்சிகள் அரசியல் வண்ணம் கொண்டவை; கட்சி நலன்களோடு இணைந்தவை. இவற்றில் பங்கேற்கத் தேவைப்பட்டவர்கள் எண்ணிக்கையில் நிறைந்த பொது மக்கள்தானே தவிர, எண், எழுத்து விற்பனர்கள் அல்ல.

பாதுகாப்பு முயற்சிகள் தேவையானவை. பயனுடையவை. போற்றத் தகுந்தவையும்கூட. அவை இன்றும், எதிர்காலத்திலும் கூடத் தேவைப்படலாம். ஆனால் பாதுகாப்பு முயற்சிகள் வேறு; வளர்ச்சி முயற்சிகள் வேறு என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பாதுகாப்பு வளர்ச்சிக்குத் தேவை; ஆனால் பாதுகாப்பே வளர்ச்சியாகி விடுவதில்லை. வேலியில்லாத வேளான்மை வீடு வந்து சேராதுதான்- ஆனால் வேலி மட்டுமே வேளான்மையாகிவிடுவதில்லை. பாதுகாப்புப் பணிகள், தேவையென்று பட்ட அளவில் தொடரட்டும். இன்று நாம், வளர்ச்சிப் பணிகள் பற்றி இதுவரை சிந்தித்ததைவிட, அதிகமாக சிந்திக்கவும், அந்த சிந்தனையின் அடிப்படையில் செயல் படவும் வேண்டும். இது நமது அவசரத் தேவைகளில் ஒன்று.

"வளர்ச்சி" என்று வரும்பொழுது அதற்குப் பல பரிமாணங்கள் இருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானது "மாற்றம்". வளர்ச்சி என்பதே மாற்றம் (Development is Change) மாற்றமில்லையேல் வளர்ச்சி இல்லை.

பழமையும், பழமையில் பெருமையும் கொண்ட நமது சமுதாயத்தில் "மாறுதல்கள்" எளிதில் இயன்றவையல்ல. "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல; கால வகையினானே" என்பது நன்னூல் சூத்திரமாயினும், பழையன எதுவும் தானாகக் கழிவதில்லை: புதியன எளிதில் புகுவதில்லை. ஆழ்ந்த சிந்தனையின், முதிர்ந்த முடிவுகளின் அடிப்படையில் தேவையற்ற பழையன சில கழிக்கப்பட வேண்டும். இன்றியமையாத புதியன சில புகுத்தப்பட வேண்டும். "கழிக்கப்பட வேண்டியவை எவை? காக்கப்பட வேண்டியவை எவை?" என்ற பிரச்சினைகள் எழும்பொழுது, கணக்கிலடங்காத கருத்து வேற்றுமைகள் தோன்றும். அவற்றை வகைப்படுத்தி, வழிப்படுத்தி, பயணத்தையும், செல்லும் பாதையையும், இடைநிலைகளிலும், இறுதிக் கட்டத்திலும் அடைய இருக்கும் குறிக்கோளையும், ஒருமைப்படுத்துவதில்தான் ஒரு சமுதாயத்தின், ஒரு இனத்தின் எதிர்காலம், அதன் ஏற்றம் இருக்கிறது. இந்தச் சாதனை, பெரும்பாலும் மக்கள் தம் தலைவர்களையும், அவர் தம் தலைமையின் தரத்தையும், உயர்வையும் பொறுத்தது.

3. வளர்ச்சிக்கு மாறுபடாத "அணுகுமுறை"

ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் மக்கள்தொகை, இயற்கை வளம், அரசியல். பொருளாதார அமைப்பு, கல்வித்திறன் ஆகியவற்றைப் பொறுத்திருக்கின்றதெனினும், அடிப்படையாக, மக்களின், அவர்களை வழிநடத்தும் அறிஞர்களின் "அணுகுமுறையைப்" பொறுத்தே அதன் எதிர்காலம் அமைகிறது. "அணுகுமுறை" உருவமும், உடலும் இல்லாத ஒரு கருவி. ஆனால் அதன் சக்தி மகத்தானது. இன்று பிரிட்டனிலுள்ள ஒரு ஆலைத் தொழிலாளி, ஒரு வாரத்தில் செய்யும் உற்பத்தியை, மேற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு தொழிலாளி $1\frac{1}{2}$ நாளில் செய்து முடித்து விடுகிறான். இது, தொழிலாளியின் உடல்வலியையோ, அல்லது இரு நாட்டினர்க்கும் இடையிலுள்ள தொழில் வளர்ச்சி வேறுபாட்டையோ பொறுத்து இருக்கவில்லை. இரு நாடுகளின் உற்பத்தி அமைப்புகள், அவற்றை அணுகும் பார்வை, நிர்வாகத் தத்துவங்கள் ஆகியவையே இந்நிலைமைக்குக் காரணம்.

பொதுவாக, நமது பயணம் பற்றியும் உறுதி வேண்டும்: பாதை பற்றியும் தெளிவு வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நமது குறிக்கோள் வரையறுக்கப்பட வேண்டும். அதற்கு அடிப்படை பின்வருமாறு:

0 தமிழ் நிலம் வளம் பெற வேண்டும்; தமிழினம் வளர வேண்டும்.

0 இனமும், நிலமும், தாழ்ந்தால் மொழி உயராது. "தாழ்ந்த இனம் உயர்ந்த மொழி படைத்ததில்லை; தானாக எம்மொழியும் வளர்ந்ததில்லை". எனவே இன வளர்ச்சி, மொழி வளர்ச்சிக்கு அடிப்படை.

0 நமது அணுகுமுறையில், பார்வையில், நமது சமுதாய வளர்ச்சிக்கும், தலைமைக்கும் மாறான "நம்பிக்கைகட்கும்" "பாசங்கட்கும்" இடங் கொடுத்துவிடக்கூடாது. பழமை, பழம்பெருமை, பழைய பன்பாடுகள், தனித்தன்மை, தூய்மை ஆகியன, நாம் தலை நிமிரவும் பயன்படலாம்: நம் தாழ்வுக்கும் காரணமாகிவிடலாம். வளர்ச்சிக்குத் துணை நிற்கும் அளவிலே அவை வரையறுக்கப்படவேண்டும். 'துணை' என்ற நிலை கடந்து 'சுமை' என்ற நிலைக்கு அவற்றைத் தாங்கும் மனநிலையை நாம் வளர்த்துவிடக் கூடாது.

0 'தமிழ்' மனித சமுதாயம் படைத்த மொழி. மனித சமுதாயம் வளர்த்த மொழி. விண்ணிலிருந்து வந்ததல்ல, விண்ணவர் தந்ததல்ல. மனிதன் படைத்த எதுவும் குறையுடையது. வளர்ச்சிக்கு வழியுடையது. வளர வேண்டிய தேவையையுடையது. எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சூழ்நிலைக்கும் தேவையான எல்லாவற்றையும், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய நமது மூதாதையர்கள் மொழியைப் பொறுத்தவரை செய்து வைத்துப் போய் விட்டார்கள் என்று நாம் எண்ணவோ, நம்பவோ இடமில்லை.

0 தமிழும் உலகிலுள்ள மற்ற பல மொழிகளைப் போன்றதே. ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்புகள் இருக்கலாம். தமிழுக்குச் சில சிறப்புகள் கூடவே இருக்கலாம். ஆயினும் மற்ற மொழியாளர்களின் அநுபவங்கள், அவர்கள் மொழிகள் வளர்ந்த முறை, அவற்றில் ஏற்பட்ட மாறுபாடுகள் அதன் மூலமாகக் கிடைத்த அறிவு ஆகியன நமக்கும் பொருந்தும்; பயன் தரும். உலகில் பல இனத்தினர் கண்ட அநுபவங்களைக் கொண்டு நாம் பயன் பெற வேண்டும் என்ற 'பணிவு' நமக்கு வேண்டும்.

அறிவும் " "

தமிழ் வளர்ச்சிக்கான பணிகள், நடைமுறைகள் பற்றிச் சிந்திக்கும்பொழுது, செயல்பட வேண்டிய அவசரத் தேவைகள் பற்றி எண்ணும்பொழுது இது போன்ற சித்தாந்தங்கள் பற்றிய விளக்கம் தேவையா என்ற கேள்வி எழலாம். இவை தேவை. செயல் முறைகளை வகுக்கும் போதும், அவற்றைச் செய்வோரைத் தேர்ந்தெடுக்கும்போதும், கருத்து வேறுபாடுகளும், ஐயங்களும் தோன்றும்பொழுதும், நமக்குப் பொதுவான 'உரைகல்' வேண்டும். நாம் முன் கூறிய அடிப்படைகள், உரைகல்லாகப் பயன்படும்.

4. செய்ய வேண்டுவது

"அரசும், ஆட்சியும், அணுயுகப் பொறிகளின் முரசும் நிறைந்து முழங்கும்" இன்றைய உலகின் அறிஞர்கள் "கலைகளின் ஊற்றெலாம் நிறைந்த களஞ்சியம்" எனத் தமிழைக் காணவும், அவர் அதை "விளம்பிடக் கேட்டுளம் விம்மவும்" ஆசையுடையவர்கள் நாம். இது ஆசையாக நிற்காது, அநுபவமாக மாறுவதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன? அச்செயலில் உடனடிப் பயன் தரும் செயல்கள் யாவை? நீண்ட கால அளவில் பயன் தருபவை யாவை? என்பதை ஆராய்வது பொருந்தும்.

4.1 பண்பாட்டு மொழி

இந்தியத் துணைக் கண்டத்தில் இன்று மாநில அளவில் ஆட்சி மொழியாகவும் பேச்சுமொழியாகவும் இருக்கும் மொழிகள் அனைத்திற்கும் இல்லாத சிறப்பு, தமிழுக்கு உண்டு. வடமொழி போன்று, தமிழ் இந்த நாட்டின் பண்பாட்டு மொழி. இந்திய நாகரிகம், இந்தியப் பண்பாடு, இந்திய இலக்கிய வளம், இந்தியத் தத்துவங்கள் என்று பேசும்பொழுது, வடமொழி, தமிழ் இரண்டின் வழியேதான் இவற்றின் முழுமையை, பரப்பை, ஆழத்தை ஒரு இந்தியனோ, அல்லது உலகக் குடிமகனோ அறிய முடியுமே தவிர, இதில் ஒன்று மட்டுமே, ஒன்றில் உள்ள இலக்கியம் மட்டுமே போதுமானதாகாது.

அறுதியிட்டுக் கூறுவிட்டாலும், தமிழ் இன்று மாநில மொழிகளில் ஒன்று போலவும், இந்த நாட்டின் பண்பாட்டு மொழி வடமொழியே என்பது போலவும்தான் நடைமுறை இருந்து வருகிறது.

போலந்து நாட்டில் வார்சாப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று மாணவராக இருந்த திரு. ஜெர்சி தார்கோவிஸ்கி என்பவர் தனது மாணவ நிலையில் கூறிய கீழ்க்கண்ட வரிகள், நாம் மேலே கூறிய உண்மைகள் எப்படி மேலெழுந்தவாரியாகப் பார்த்தால்கூட புலனாகிறது என்பதை விளக்கும்.

> "....சிந்து வெளி நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் திராவிட நாகரிகப் பண்பாட்டுக் கூறுகள் இருக்கக் கண்டு, அதன் பிறகே தமிழ் படிக்கத் தொடங்கினேன்......."

"இந்தியப் பண்பாட்டை உணர்ந்து கொள்ள திராவிடப் பண்பாட்டைப் பற்றிய படிப்பு மிகவும் இன்றியமையாதது என்பது என்னுடைய கருத்து. பெரும்பாலான ஐரோப்பியர்கள் இந்தியா என்றாலே வட இந்தியாவைப் பற்றித்தான் நினைக்கிறார்கள். திராவிடப் பண்பாட்டையே மறந்துவிட்டு, அதன் அடிப்படையில் வளர்ந்த வட இந்தியாவை மட்டுமே கண்டுவிட்டு, அதுதான் உண்மையான இந்தியா என்று நினைப்பது மிகவும் வருந்தத் தக்கது."

இந்த நிலைக்கு, மற்றவர்களைக் குறை கூறுவதை விட, நாம் நம்மைத்தான் குறை கூறிக் கொள்ள வேண்டும். நாம் நமது பாரம்பரியத்தை உணர்ந்து, அதை மற்றவர்கள் உணரவில்லையே, ஒப்பவில்லையே என்று புழுங்கிய அளவிற்கு, அதை மற்றவர்கள் உணரவும், ஒப்பவுமான வழியில் செயல்படவில்லை. வடமொழியும், தமிழும், ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்ற மொழிக் குடும்பம் என்ற நிலையை விட்டு, இந்திய மண்ணின் இரு பண்பாட்டுக் கண்கள் என்ற அணுகு முறையை நாம் வளர்க்க வேண்டும். இன்று ஐரோப்பா முழுவதிலும் கிரேக்க மொழியும், இலத்தீன் மொழியும், பண்டை மொழிகள், பண்பாட்டு மொழிகள் என்ற அடிப்படையில் கற்கப்படுகின்றன. தமிழ் இவ்விரண்டையொத்த, அல்லது மிஞ்சிய பழமையும், பண்பாட்டு அடிப்படையும் உள்ளதென்பது உலகறிந்த, உலகு ஒப்பிய உண்மை.

நமது முதல் பிரதமர் நேரு அவர்களிலிருந்து இன்றைய பிரதமர் தேசாய் அவர்கள் வரை, இந்திய பாரம்பரியத்திற்கு எழுச்சியும், ஏற்றமும் தரும் உண்மையைப் புறக்கணிப்பவர் யாரும் இல்லை. வழக்கிறந்த மொழிக்குப் பொதுவான ஒப்புதல் கிடைப்பது போல, வழக்கிலுள்ள ஒரு மொழிக்குக் கிடைப்பதில் சில சிக்கல்கள் எழலாம். பொறாமை உணர்வுகள் தோன்றலாம். உண்மை, ஒழுங்காக எடுத்துச் சொல்லப்படுமானால், இம்மேக மண்டலங்களை ஊடுருவி ஒளிவிடும் தன்மையுடையது. நமது பல்கலைக் கழகங்களும், தமிழ்த் துறைகளும், இந்த வகையில் குறிப்பிடத்தக்க எந்தப் பணியும் செய்யவில்லை. அகில இந்திய அரசியலில் புகழ்பெற்று நின்ற தமிழ்த் தலைவர்களும் என்ன காரணத்தாலோ, தமிழின் இந்தக் கூறுபாட்டை அவ்வளவாக வலியுறுத்தவில்லை. இந்தக் குறைபாடுகளை ஈடுசெய்யும் பணிகட்கு நாம் வழிகோலவேண்டும்.

இந்தியப் பண்பாட்டிற்கும், பாரம்பரியத்திற்கும், பாதி உரிமையாளர்களான தமிழினம், இன்று ஏதோ ஒதுக்கப்பட்டுவிட்டது போன்ற ஒரு உணர்ச்சியில் புழுங்கிக் கொண்டிருக்கிறது. வடமொழி போன்றே, தமிழும் இந்தியப் பண்பாட்டிற்கு, பாரம்பரியத்திற்கு அடிப்படை மொழி என்ற வரலாற்றுண்மை, நடைமுறை அளவிலும் ஏற்கப்படுமானால், ஐக்கிய உணர்வுகட்குப் பெருந்துணை புரியும்; தென்பகுதி மக்களையும், அவர்களது தேசிய உணர்வுகளையும் இன்னும் சற்று, இந்த நாட்டின் மற்ற பகுதியினர் அறிய உதவும். இந்த நிலையை அரசியல் ரீதியில் 'உரிமை' என்பதாக அல்ல, 'உண்மை' என்பதால், இந்த நாட்டிற்கு "உயர்வு" கூட்டும் உண்மை என்பதால், முறையாக, முன்னணித் தலைவர்களிடம் விளக்குவது பெரும் பயன் தரும். கீழ்க்கண்ட முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்:

0 இந்தியப் பண்பாட்டின் வரலாற்றை, வளர்ச்சியை வாழ்வை, அதன் நுட்பமான கூறுபாடுகளை, முழுமையை, அதன் பரப்பை, தமிழ், வடமொழி ஆகிய இரு நூல்களிலுள்ள பண்டை இலக்கியங்கள், மற்ற சான்றுகள் மூலம்தான் உணர முடியும் என்ற உண்மை வலியுறுத்தப்பட வேண்டும்.

0 தமிழிலுள்ள இலக்கியக் கருவூலங்கள், பக்திப் பாடல்கள், சமயக் கருத்துக்கள் ஒப்பிலாத் தனித்தன்மை வாய்ந்தவை. இவைபற்றி முறையான நூல்கள் – மொழி பெயர்ப்பாகவும் ஆய்வுரைகளாகவும் – ஆங்கிலத்தில் மற்றும் இந்திய மொழி களில் அழகான முறையில் வெளியிடப்பட வேண்டும்.

0 மைய அரசின் கீழுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ், தமிழ்ப் பண்பாடு, இந்திய கலாச்சாரத்தில் அதன் பங்கு, பற்றிய ஆய்வுகட்கும், போதனைகட்கும் இன்றிருப்பதைவிட, இன்னும் விரிவான அளவில் ஏற்பாடு செய்ய வலியுறுத்த வேண்டும்.

0 நமது பல்கலைக் கழகங்கள், கணிசமான அளவில் தமிழ்த் துறைகளைப் பெருக்கி, ஆழ்ந்த புலமையும், விரிவான பார்வையும், தலைமையும் கொண்ட அறிஞர்களை அமர்த்தி இதுபோன்ற பணிகட்கு வித்தாக அமையும் ஆராய்ச்சி நூல்களையும், கட்டுரை நூல்களையும் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

4.2 உலக மொழி

தமிழ், இந்தியாவில் மட்டும் பேசப்படும் மொழி அன்று, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. மலேசியா, பிஜி, மோரிசு, தென் ஆப்பிரிக்கா, கயானா, ட்ரினிடாட் போன்ற பகுதிகளில் கணிசமான மக்கள் தமிழ் பேசு-பவர்கள். இதுமட்டுமன்றி, இலங்கை, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் தமிழகம் மூலம் வந்த இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழின் இந்தக் கூறுபாட்டை எடுத்துரைப்பதோடு, தமிழ் இலக்கிய அறிவியல் வளர்ச்சியில், அயல்நாட்டுத் தமிழர்களும் நல்ல முறையில் பங்கு கொள்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும்.

சென்னையில் "உலகத் தமிழ் ஆய்வு நிறுவனம்" (International Institute of Tamil Studies) ஒன்று இருக்கிறது. அது இப்பொழுது அவ்வளவாக, ஒரு "உலகத் தமிழ் ஆய்வு நிறுவன"மாக, அது அமைக்கப்பட்டபோது கருதிய குறிக்கோள்களுடன், பணி செய்யவில்லை.

கீழ்க்கண்ட துறைகள் ஏற்படுத்தபட வேண்டும் என்பது நோக்கம்:

i. Faculty of Literature

ii. Faculty of Linguistics

iii. Faculty of History and Archaeology

iv. Faculty of Sociology and Anthropology

v. Faculty of Arts and Architecture

vi. Faculty of Overseas Tamils

vii. School of Languages

viii. School of Orientation

தமிழ் மொழிக்கும், அதன் பண்டை வரலாற்றுச் சிறப்புகளை அறியும் பணிக்கும், உலகத் தமிழ் ஆராய்ச்சி முயற்சிகளை ஒருமைப்படுத்தவும் சிறந்த வாய்ப்புகளைக் கொண்ட இந்நிறுவனம், எண்ணிய வழியில் வளரவில்லை. இன்று அது, நமது பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளிலிருக்கும் தமிழ்த் துறைகள் போல, நடந்த பாதையைவிட்டு நகராது போய்க் கொண்டிருக்கிறது. இதன் பணிகளை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தமிழறிஞர் மட்டுமன்றி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பாவின் பல நாடுகள் ஆகியவற்றில் தமிழ்த் துறைகளிலுள்ள ஆய்வாளர்கள், மேலும் கடல் கடந்த நாடுகளில் இருக்கும் ஆர்வமிக்க தமிழர்கள் ஆகியோர் பங்கு கொள்ளுமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். மேலை நாடுகளில் தமிழ் கற்ற பல அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்து சில மாதங்கள் தங்கிப் பணிபுரிய இப்பொழுதிருப்பதைவிட விரிவான ஏற்பாடு செய்ய வேண்டும். பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள், ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள், பழமை வாய்ந்த தமிழ் மண்ணைப் பற்றியும், மொழியைப் பற்றியும், இந்தியக் கலாச்சாரத்தில் தமிழர் பங்கு பற்றியும், ஆய்கின்றன. இன்னும் விரிவாக ஆயவும், பயில்வும் ஆவலுடையனவாயிருக்கின்றன. இவை பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

0 உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப் பட்டபோது, அதன் Project Report -இல் எடுத்துக் கூறப்பட்ட குறிக்கோள்கள் மக்கதானவை. உயர்ந்த, தொலை நோக்குள்ள, திட்டங்களைக் கொண்டவை. நல்ல முறையில் செயல் பட்டால் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியும் இதற்குத் தொடர்ந்து கிடைக்கும். இதன் பணி சீரமைக்கப் படவேண்டும். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

0 உலகத் தமிழ் ஆய்வு நிறுவனத்திற்கென ஒரு தனிக் கட்டடம் இல்லை. இதற்கான அனுமதியும், பண ஒதுக்கீடும் இருக்கிறது. ஒதுக்கிய தொகையை அதிகரித்து ஒரு ~~அழகிய~~ வசதியான கட்டடம் கட்டி, இந்த நிறுவனம் நல்ல சூழ்நிலையில் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்த உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்துவதாகச் செய்திகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. இம் மாநாடு தொடங்குமுன் இந்த நிறுவனத்தின் கட்டட வேலையைப் பூர்த்தி செய்வது ஏற்புடைத்தாகும்.

4.3 விஞ்ஞானத் தமிழ்

நாம் இன்று காணும் தமிழ், இலக்கிய வளம் கொண்ட மொழி. ஒப்புயர்வற்ற கவிதைகளையும், காவியங்களையும், சமய நூல்களையும், உருக்கம் நிறைந்த பக்திப் பாடல்களையும் தன்னகத்தே கொண்டது. பல் பொருள் ஒரு சொல் என்ற வகையிலும், ஒரு பொருள் பல சொல் என்ற அளவிலும், வியக்கத்தக்க சொல்வளம் நிறைந்தது. ஆனால், இன்றைய எண்ணற்ற அறிவுத்துறைகளின் வளர்ச்சியைத் தாங்கி நிற்கும் கருவூலமாக, ஊற்றுகத் தமிழ் இருக்கின்றதா என்றால், "இல்லை" என்றுதான் கூறவேண்டும். நமக்கு என்றும் போல, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் இருக்கிறது. ஆனால் இன்றைய வாழ்வுக்கும் வளத்திற்கும், நாளைய வளர்ச்சிக்கும் துணை செய்யும் "விஞ்ஞானத் தமிழ்" இன்னும் உருவாகவில்லை. அதற்கான அடிப்படை கூட, நிறைவு தரும் வகையில் இன்னும் அமையவில்லை.

"பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்" என்று பாரதி பாடினனே, அந்தப் பலகல்வி தருவதற்கான இலக்கியவளம் இன்னும் தமிழில் உருவாகவில்லை.

"புத்தம் புதிய கலைகள்; பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்று ஒரு பேதை கூறக் கேட்டு, சுமார் 60 ஆண்டுகட்கு முன் பாரதி வெருண்டான். இந்த 60 ஆண்டு காலத்தில், தமிழின் வாழ்விலும், வளத்திலும், ஒரு புதிய சகாப்தத்தையே, பாரதி சொன்ன வழியில் - பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்ப்பதன் மூலம், இறவாத புகழுடைய புது நூல்களை எழுதுவதன் மூலம் - படைத்திருக்கலாம். ஆனால் நாம் செய்யவில்லை.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாரதி உத்தரவிட்டான். தமிழர்கள் எட்டுத் திக்கும் சென்றனர். இன்றும் செல்கின்றனர். கலைச் செல்வங்களும் கொணர்ந்தனர். இன்றும் கொணர்கின்றனர். ஆனால் ஏனோ அவர்கள் அவற்றைத் தமிழில் சேர்க்கவில்லை.

"தந்தை அருள்வலியாலும், இன்று சார்ந்த புலவர் தவ வலியாலும், இந்த பெரும்பழி நீங்கும்" என்று பாடிய பாரதி, பழிக்கு இடமிருப்பதை அன்றே கண்டான். அதைப் பெரும்பழி என்றும் நமக்கு உணர்த்தினான். அவன் பெரும் நம்பிக்கை வைத்த புலவர்தம் தவவலி, இன்று வரை அப்பழியைத் தீர்க்கவில்லை. அதற்கான முயற்சிகள் என்னவோ நடந்து கொண்டுதானிருக்கின்றன. ஏனோ அவை எதிர்பார்த்த வெற்றியை எட்டவில்லை. எனவே, இந்த விஞ்ஞான உலகத்தில் கல்வி மொழியாகத் தமிழ் வளர, மலர, நாம் உடனடியாகச் செய்ய வேண்டுவது என்ன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அவை பின்வருமாறு:

0 தமிழில் அறிவுத் துறைகளில் தாளிகைகள் (Magazines) வெளியிடல்.

0 தமிழில் அறிவுத்துறைகளில் நூல்கள் வெளியிடல்.

0 எழுத்துச் சீர்திருத்தம் செய்தல்.

5. தமிழில் தாளிகைகள்

பொதுவாக அறிவுத்துறை நூல்களைத் தமிழில் எழுதுவது பற்றிப் பேசும்பொழுது, பலர், அதில் இருக்கும் ஒரே இடர், "மரபுச் சொற்கள்", அல்லது "துறைச் சொற்கள்" இல்லாமைதான் என்றும், அவற்றைப் படைத்து விட்டால் நூல்கள் எழுதி முடித்த மாதிரி என்றும் நம்புகிறார்கள். இந்தப் பணி அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஒவ்வொரு அறிவுத் துறைக்கும், தனிச்சொற்கள் மட்டுமல்ல; தனி மொழி, தனி நடை உண்டு. சட்டத்துறையில் பயன்படுத்தப் படும் ஆங்கில நடைக்கும், இலக்கியத்தில் பயன்படுத்தப்படும் ஆங்கில நடைக்கும் வேறுபாடு உண்டு. அரசு அலுவலகங்களில் ஆணைகள் பிறப்பிக்கப் பயன்படுத்தப் படும் ஆங்கில நடைவேறு; அன்றாடம் பேச்சு வழக்கில் பயன்படும் ஆங்கிலம் வேறு. எனவே, ஒவ்வொரு அறிவுத்துறைக்கும் ஏற்ற சில தனித்தன்மைகளைக் கொண்ட மொழி, நடை உருவாக வேண்டும். அத்துறைகட்குத் தேவையான பல்லாயிரம் துறைச் சொற்கள் உருவாக வேண்டும். இது ஒரு தனி நபரோ, அல்லது ஒரு குழுவோ செய்யக் கூடிய பணி அல்ல.

பல்வகை அறிவுத்துறைகளில் தேர்ச்சிபெற்ற, தமிழ் ஆர்வமுள்ள அனைவரும், குறிப்பாக இளைஞர்கள் இதில் பங்கு பெற வேண்டும். தமிழகம் முழுமையுமுள்ள அறிவுத் திறனும், ஆர்வமும் பற்றும் இதில் ஈடுபடுவதற்கான சூழ்நிலைகளை, வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நூல்கள் எழுதும் பணிகளில் வாய்ப்புகள் பரவலாக்கப்படுவதில்லை. திறனுடையார் எனத் தெரிந்தவர்களைத்தான் அதில் ஈடுபடுத்துகிறோம். வெளியில் அவ்வளவாகத் தெரியாத எண்ணற்றவர்களுடைய பயிற்சியும், பற்றும், ஆர்வமும், ஆற்றலும் பயன்படுத்தப்படுவதில்லை. இதற்கு ஏற்ற மன்றமாக உதவக் கூடியது, நல்ல முறையில் அமைந்த அறிவுத்துறைப் பத்திரிகைகள். (Magazines)

வேளாண்மை, மருத்துவம், பொறியியல், அறிவியல், பொதுவியல் ஆக குறைந்தது ஐந்து துறைகளில், மேல் நாட்டுத் தாளிகைகட்கு ஈடான ஆக்கமும், அமைப்பும் கொண்ட பத்திரிகைகளைத் தமிழில் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும். கோவையிலிருந்து வெளிவரும் "கலைக்கதிர்"

இத்துறையில் பெருந்தொண்டு செய்துவருகிறது. ஆனால் அது போதுமானதல்ல. விரிவான அளவில் தமிழில் அறிவுத்துறைப் பத்திரிகைகள் வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும். பின்கண்ட வகையில் இவற்றை வெளியிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

5.1 வேளாண்மை

ஏற்கனவே, வேளாண்மைப் பல்கலைக்கழகம் "வளரும் வேளாண்மை" என்ற தலைப்பில் மூன்று திங்கட்கு ஒரு முறையும் "உழவர் தோழன்" என்ற தலைப்பில் மாதமொரு முறையும், ஆக இரண்டு தாளிகைகளை (Magazines) வெளியிட்டு வருகிறது. இது சிறந்த பணி. இதை விரிவாக்கலாம்.

5.2 மருத்துவம்

இத்துறையில் தமிழில் இன்றுவரை நல்ல பத்திரிகை எதுவும் வெளியிடப்படவில்லை.. "உடல்நலம்" அல்லது அதை ஒத்த தலைப்பில், சென்னை மருத்துவக் கல்லூரியைத் தலைமையிடமாகக் கொண்டு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை, சிறந்த பத்திரிகை ஒன்றை வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும். பின்னர், அதை மாதம் ஒரு முறையாக மாற்றலாம். பிணிகள் பற்றியும், மருந்துகள் பற்றியும், பிணி தடுக்கும் முறைகள் பற்றியும், பொது மக்கட்கு, பள்ளி, கல்லூரி மாணவர்கட்கு இன்னும் ஓரளவு மருத்துவத் துறையில் புதிய முன்னேற்றங்கள் பற்றி, மருத்துவர்க்கும் பயன்படும் கட்டுரைகளை வெளியிடலாம். மேல் நாட்டு முறை மட்டுமன்றி இந்திய மருத்துவ முறைகள் பற்றியும், அவற்றின் இன்றைய நிலைபற்றியும் எதிர்கால வளர்ச்சிபற்றியும் கருத்துக்கள் பரிமாற இடமளிக்கலாம். இதில் பல டாக்டர்கள் உறுதியாகப் பங்கு பெறுவார்கள். மருத்துவத்துறைக்கேற்ற மொழியே நாளாவட்டத்தில் உருவாகும்.

5.3 பொறியியல்/தொழில் நுட்பம்

பொறியியல் துறையில், தாளிகைகள் வெளியிட ஆங்காங்கு சிறு முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன. இருப்பினும் சிறப்பான அளவில் ஒரு இதழ் இதுவரை வெளியிடப்படவில்லை. சென்னையிலிருக்கும் கிண்டி பொறியியல் கல்லூரியை, அல்லது அங்கு அண்மைக் காலத்தில் அமைய இருக்கும் "தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை"த் தலைமை இடமாகக் கொண்டு "தொழில் வளம்" என்ற தலைப்பில், மூன்று மாதங்கட்கு ஒரு முறையாக நல்ல இதழ் ஒன்றை வெளியிடலாம். பொறியியல்/தொழில் நுட்பத் துறைகளில் தமிழறிவும், பற்றும், ஆர்வமும் அதே சமயத்தில் துறை வல்லமையும் கொண்ட இளைஞர்கள் எண்ணிலாதார் உளர். அவர்களது உணர்வுகள் வெள்ளமெனப் பெருகி இவ்வெளியீட்டுக்கு உதவுவது காணலாம்.

5.4 அறிவியல் (Science)

அறிவியலில், இரு பெரும் பிரிவுகள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று, physical Sciences: இரண்டாவது Life Sciences. இவ்விரண்டிலும் முன்னதின் சில பகுதிகள் பொறியியலிலும், பின்னதில் சில பகுதிகள் மருத்துவத்திலும் இடம் பெறும். எனினும் இவற்றிற்கெனத் தனியே ஒரு தாளிகை தேவை. தொடக்கத்தில் Physical Sciences, Life Sciences ஆகிய இரண்டு பகுதிகட்கும் பொதுவாக ஒரு தாளிகையை சென்னைப் பல்கலைக் கழகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வெளியிடலாம். "அறிவியல்" என்ற தலைப்பே பொருந்தும் ஒன்று.

5.5 பொது இயல்

சமுதாய இயல்கள், பொருளாதாரம், வரலாறு, வணிகம், மொழியியல் போன்ற துறைகளை ஒன்றுகச் சேர்த்து, மதுரைப் பல்கலைக் கழகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாளிகை வெயியிடலாம். இது பல துறைகளை உள்ளடக்கிய ஒன்றானமையின், தலைப்பும் சற்றுப் பொது-வானதாகவே இருக்க வேண்டும்.

இந்திய மொழிகளில் அறிவுத்துறைகளில் பத்திரிகைகள் வெளியிட Council of Scientific and Industrial Research போன்ற நிறுவனங்கள் நிதி உதவி செய்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தாளிகைகள் எல்லா நூல் நிலையங்களிலும், கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வாங்கப்பட வேண்டும். இதனால் ஏற்படும் நலன்கள் பின்வருமாறு:

0 பல்வகை அறிவுத் துறைகளில், அவற்றிற்கியைந்த தமிழ் நடை, சொற்கள் உருவாகத் துணை செய்யும்.

0 மரபுச் சொற்களை உருவாக்குவதில், பலரது ஆக்கத்திறன் பயன்படுத்தப்படும். பல மரபுச் சொற்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் சிறந்தவை நாளா வட்டத்தில் நிலைபெறும்.

0 ஆர்வமும், அறிவுத் தலைமையும் கொண்ட பலர் ஒரே சமயத்தில் இப்பணியில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

0 பின்னர், இத்துறைகளில் நூல்கள் உருவாவதற்கு, தாளிகைகளில் வெளியான கட்டுரைகள், பயன்படுத்தப்பட்ட மரபுச் சொற்கள் அவற்றைப் பற்றிய கருத்துக்கள், வாதங்கள் மிகவும் பயன்படும்.

0 மேலை நாடுகளில் வெளியாகும் பத்திரிகைகளில் கணிசமான பகுதி, கதை, கட்டுரை என்றில்லாமல் பல்வகை அறிவுத் துறைகளில் வெளியிடப்படுகின்றன. ரஷியாவில் 100க்கு 50 தாளிகைகள் அறிவியல், தொழிலியல் போன்ற அறிவுத் துறையைச் சார்ந்தவை. தமிழில் 100க்கு ஒன்று கூட இன்று இத்துறைகளில் வெளியிடப்படுவதில்லை. இக்குறைகளைக் களைய அரசு செய்யும் முக்கியமான முதல் முயற்சியாக இது அமையும்.

0 முதன் முறையாக படிக்கும் ஆர்வமுள்ள பொது மக்கட்கும், பள்ளி, கல்லூரி மாணவர்கட்கும், பல்துறைச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், தமிழ்த் தாளின் வழியாக கிடைக்கும் வாய்ப்பு இதனால் உருவாகும். இது வளரும். பெருகும்.

6. அறிவுத் துறை நூல்கள்

தமிழில் அறிவுத்துறை நூல்கள் வெளியிடுவது பற்றிக் கருதுமுன்பு, இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகம் பற்றிய சில உண்மைகளை இங்கு குறிப்பிட வேண்டும்.

உலகில் இப்பொழுது கிட்டத்தட்ட, 1,00,000 தாளிகைகள், (Magazines or Journals) பல துறைகளில் அறிஞர்கள், விற்பனர்கள் தங்கள் ஆய்வின், அநுபவத்தின் அடிப்படையில் எழுதிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றன. இவற்றில் ஆண்டுதோறும் 12,00,000 கட்டுரைகள் வெளியாகின்றன. ஏராளமான ஆய்வு நிலையங்கள், எண்ணற்ற ஆய்வாளர்கள், புதியன காணும் முயற்சியில் இரவு பகலாக ஈடுபட்டிருக்கின்றனர். அதன் விளைவாக, பொறியியல் போன்ற துறைகளில் 10 ஆண்டுகட்கு ஒரு முறை, இரட்டிப்பாகும் அளவிற்கு அறிவு வளர்கிறது. அதாவது, இன்னும் 10 ஆண்டில் அறிவு இன்றிருப்பதுபோல், இரண்டு மடங்காகிவிடும். உயிரியல், பாலிமர், நுட்பவியல் போன்ற துறைகளில், நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, 1970 வரை ஏற்பட்ட வளர்ச்சியைவிட, 1970-ல் இருந்து கடந்த ஏழு ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி அதிகம். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகம், உண்மையிலேயே எண்ணிப் பார்க்க மலைப்பைத் தரும் ஒன்று. இதுவரை மானிட சமுதாயம் கண்டிராத வளர்ச்சி வேகம்.

வாழ்வின் பல துறைகளில், மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்று அண்மைக் காலம் வரை நாம் நினைத்திருந்தவையெல்லாம், இன்று இயன்ற ஒன்றாகி விட்டது. கனவுகளாக, கவிஞனின் கற்பனைகளாக நேற்று வரை இருந்த பல, இன்று கண்முன் காட்சிகளாக நிற்கின்றன. நிலவுக்குச் சென்று திரும்பி வந்த மானிடம், இன்று விண்ணும் வெளியும் தனதே என வெற்றி நடை போடுகிறது. சிரஞ்சீவித்துவம் (Immortality) கூட மனிதனுக்கு இயலாததல்ல என்ற அளவிற்கு அறிவுலகம் வளர்கிறது. வளர்ச்சி வேகம், எண்ணவும் இயலாத நிலையை எட்டிப்பிடித்திருக்கிறது. இந்தக் கால கட்டத்தில், நாம் நீண்ட உறக்கத்திலிருந்து கண் விழித்து, இந்த மாபெரும் பயணத்தில் நாமும் சேர வேண்டாமா என்று எண்ணுகிறோம். ஊர்ந்தும், தவழ்ந்தும் பயணத்தைத் தொடங்குகிறோம். நாம் முன்னேறிய நாடுகளை எட்டிப்பிடிப்பது எப்படி, அவர்களோடு இணையாக, முடிந்தால் அவர்களினும் ஏற்றத்துடன் நிற்பது எவ்வண்ணம் என்று எண்ணுகிறோம்.

ஜப்பான் நம் போன்ற ஆசிய நாடுகளில் ஒன்று. அதன் மக்கட் தொகை 10.1 கோடி. மேற்கு ஜெர்மனியின் மக்கட் தொகை 5.8 கோடி. ஜப்பான் ஆண்டு ஒன்றுக்கு 32,000 தலைப்புகளில் நூல்களை வெளியிடுகிறது. மேற்கு ஜெர்மனி ஆண்டு ஒன்றுக்கு 46,000 நூல்களை வெளியிடுகிறது. அமெரிக்கா, ரஷியா, போன்ற நாடுகளை எடுத்துக் கொள்வோமானால், அமெரிக்கா ஆண்டுக்கு 80,000 நூல்களையும், ரஷியா ஆண்டு ஒன்றுக்கு 79,000 நூல்களையும் வெளியிடுகின்றன. நம் நிலை என்ன? தமிழில் ஆண்டு ஒன்றுக்கு 800 அல்லது 1,000 நூல்கள் வெளியிடப்படுகின்றன. மேலும் நாம் பதிப்பிக்கும் பிரதிகள் ஒரு நூலுக்கு 1,000 அல்லது 2,000 பிரதிகள். அவர்கள் பதிப்பிப்பது பல ஆயிரங்கள்.

நமது இன்றைய வேகத்தில் மேற்கு ஜெர்மனி ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 45 ஆண்டுகள் ஆகும். அமெரிக்கா ஓராண்டில் வெளியிடும் நூல்களை நாம் வெளியிட 80 ஆண்டுகள் ஆகும். நாம் இந்த வேகத்தில் தான் தொடர்ந்து வளரப் போகிறோமா? இது வளர்ச்சியல்ல. நாம் இன்னும் விரைவில் வளர வேண்டுமானால் கடந்த காலத் தேக்க நிலைகட்குக் காரணமென்ன? அவற்றை மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிலைகள், ஏதோ செயல்திறன் குறைவால் மட்டுமே ஏற்பட்டவையல்ல. இவை சித்தாந்தங்களின் குறைகளால் ஏற்பட்டவை. எனவே மொழி பற்றிய நமது சித்தாந்தங்கள் ஆராயப்பட வேண்டும்.

பொதுவாகவே, ஆசிய நாடுகளில் பதிப்பிக்கப்படும் நூல்கள் குறைவு. இந்தியாவில், இந்திய மொழிகளில் வெளியிடப்படும் நூல்கள் ஒரு கோடி மக்கட்தொகைக்கு சுமார் 130; தமிழில் ஒரு கோடி மக்கட் தொகைக்கு 200 நூல்கள் தேறும். ஆனால் உலக அளவில் பார்க்கும்பொழுது, ஒவ்வொரு கோடி மக்கட்தொகைக்கும் சுமார் 1,800 நூல்கள் வெளியாகின்றன. நாம் செல்ல வேண்டிய பாதை நெடிது: பயணம் பெரிது.

இந்தியாவில் வெளியாகும் நூல்களில் 100க்கு 45, ஆங்கிலத்தில் வெளியாகின்றன. உலகில், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத எந்த நாட்டிலும் இத்தனை சதவிகிதம் நூல்கள் ஆங்கிலத்தில் வெளியிடப் படுவதில்லை.

இந்திய மொழிகளில் வெளியிடப்படும் நூல்களின் தொகையே குறைவு. அவற்றில் அறிவியல், பொறியியல், மருத்துவம் போன்ற பல்வகை அறிவுத்துறைகளில் வெளியிடப்படும் நூல்கள் மிகமிகக் குறைவு. தமிழில் இத்துறைகளில் இன்றுவரை வெளியிடப்பட்டுள்ள எல்லா நூல்களையும் சேர்த்தால் 1,000த்தை மிஞ்சாது. இவற்றில் பல, மிகமிகச் சாதாரணத் தரத்தைச் சேர்ந்தவை; கணக்குக் காட்ட மட்டுமே பயன்படக்கூடியவை.

தமிழில் நூல்கள் வெளியிடும் பணியில், அறிவுத்துறைகளிலும் சரி, மற்ற ஆராய்ச்சித் துறைகளிலும் சரி, நமது பல்கலைக் கழகங்களின் தொண்டு வருந்தத்தக்கது. பல்கலைக் கழகங்களின் தமிழ்த் தொண்டு அவசரமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. இதற்குமேல் இங்கு கூறுவது முறையாகாது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், New Century Book House (Private Limited) கலைக்கதிர் பதிப்பகம் ஆகிய நிறுவனங்கள் பாராட்டத்தக்க அக்கறை காட்டியுள்ளன. முயற்சி எடுத்துள்ளன. தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், பாட நூல்கள் என்ற அளவில் கணிசமாகப் பணி புரிந்துள்ளது.

அறிவியல் உலகம் எங்கிருக்கிறது: நாம் எங்கிருக்கிறோம். முன்னேறிய நாட்டினர் எந்த வேகத்தில் வளர்ந்திருக்கின்றனர்: வளர்கின்றனர். நாம் எப்படி வளர்கிறோம்; என்ற நிலைகள் பற்றியெல்லாம் நாம் இன்றும் சற்றுக் கவலையோடு சிந்திக்க வேண்டும்.

வளர்ச்சிப் பணியில், முறையான ஈடுபாடும், முயற்சியும் இல்லாத நிலை ஒரு புறம் இருக்க, பகைமை உணர்ச்சிகளை வளர்க்கும் போக்குகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. தமிழில் பற்றும், பாசமும் அதன் வளர்ச்சியில் ஆசையும், ஆர்வமும் கொண்டவர்களே, தம்மையறியாது ஒந்நிலைகட்குத் துணை போகின்றனர். அவர்களில் பலர் தங்கள் கருத்துக்கு மாறுபட்டவர்களையெல்லாம், "தமிழ்த் துரோகிகள்" என்கிறார்கள். மொழி, இனவளர்ச்சி பற்றிய பிரச்சினைகளில் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பவர்களை 'துரோகிகள்' என்றும் 'விரோதிகள்' என்றும்

கூறுவது ஒருவகையான அநாகரிகம். இந்த அநாகரிகத்திலிருந்து விடுபடும் அளவுக்குகூட அறிவிலும், பார்வையிலும் வளராதவர்களால், அவர்கள் எவ்வளவு புலமை படைத்திருப்பினும், தமிழ் அறிவு படைத்திருப்பினும், ஆர்வம் கொண்டிருப்பினும் - தமிழை வளர்க்க முடியாது. இன்று தமிழ் வளர்ச்சி பற்றி பேசப்படும் குழுக்களில், மேடைகளில், இந்த மனப்பான்மையோடு அணுகுபவர்கள் சற்று அதிகமாகவே தென்படுகிறார்கள். இதனால், மற்ற அறிவுத் துறையினர், ஆர்வம் இருப்பினும் அஞ்சி ஒதுங்கி நிற்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற முயலவேண்டும்.

இரண்டாவதாக, தமிழ் வளர்ச்சி பற்றிப் பேசும் போதெல்லாம் அது ஏதோ, தமிழ்ப் புலவர்கள், தமிழ் மொழி அறிஞர்கள் மட்டுமே செய்ய வேண்டிய வேலையாக எண்ணப்படுகிறது. நாம் அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கில் வெளியிடப்படுவதாக குறிப்பிட்ட நூல்கள், ஆங்கில மொழிப் புலவர்களும், ஜெர்மன் மொழிப் புலவர்களும் எழுதியவையல்ல. அவை, அறிவுத்துறை விற்பனர்களால் எழுதப்பட்டவை இன்னும் கூறப்போனால், கதையும், கவிதையும், கொண்ட இலக்கியங்கள்கூட எந்த நாட்டிலும் மொழிப் புலவர்களால் வளர்வதில்லை. பொது மக்கள் தம் மத்தியில் தோன்றும் படைப்பாளர்களால் வளர்கிறது. ஒரு சமுதாயத்தில் மொழி, இலக்கணப் புலவர்கள் காவலர்களைப் (Police) போன்றவர்கள். அவர்கள் இருப்பதைக் காப்பவர்கள். இல்லாததைப் படைப்பவர்களல்ல. எனவே, முன்னேற்றப் பணிகளில் அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, பொருளாதாரம், வணிகம் போன்ற பலதுறை அறிஞர்கள் ஈடுபாடு கொள்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும். இன்று தமிழர்கள் பலர் புகழ்பெற்ற மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர் பதவி வரை உயர்ந்திருக்கின்றனர். அவர்கள் உயர்கல்வி அரங்கில் பாடநூலாக ஒப்புக் கொள்ளும் தரமுடைய நூல்களை ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றனர். விற்பனர் உலகம் ஒப்புக் கொள்ளும் அளவிற்கு உயர்ந்து நிற்கும் புலமையும் புகழும்

பெற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் தமிழ்ப் பற்றும், ஆர்வமும் தேவையான தமிழ்அறிவும் கொண்டவர்கள் பலர். அமெரிக்காவிலிருக்கும் தமிழர்களில் ஒரு சிலர் ஒன்று சேர்ந்து தமிழ் வளர்ச்சிக்காக (Tamilnadu Foundation) என்ற ஒன்றை நிறுவி, அதற்குப் பணம் சேர்த்து, வரிகளிலிருந்து விதி விலக்குப் பெற்று, மேலே செயல்படுவது பற்றிச் சிந்தித்து வருகிறார்கள். எனவே, ஒதுங்கி நிற்கும் பலர், உண்மையிலேயே தமிழ் வளர்ச்சிக்கு உதவக் கூடிய பலர், ஆக பலதிறத்தினர், தரத்தினர் இந்தப் பணியில் ஈடுபடக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

நூல்கள் வெளியிடவேண்டிய துறைகளை, ஐந்து அல்லது ஆறு பெரும் பிரிவுகளாகப் பகுத்து, ஒவ்வொன்றுக்கும் வல்லுநர் குழு அமைத்து, வருகிற ஐந்து ஆண்டுகட்குள் எழுதவேண்டிய தலைப்புகளையும் அதற்கான ஆசிரியர்களையும் பரிந்துரைக்கவும், தொடர்ந்து அவ்வெளியீடுகளை கொண்டு வரத் துணை செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்நூல்கள் பாடப் புத்தகமாகப் பயன்பட வேண்டும் என்ற குறிக்கோளோடு அணுகக் கூடாது. முதலில், பல்வகை அறிவுத் துறைகளில் பொதுவான செய்திகள் கொண்ட நூல்கள் வெளியிடப்பட வேண்டும். தொழில் நுட்பப் பயிலகங்களில், கல்லூரிகளில் பயன்படத்தக்க, ஆனால் அதே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்திற்காக மட்டுமே எழுதப்படாத நூல்கள் வெளியிடப்படவேண்டும்.

இந்த இடத்தில் இன்னொன்றும் குறிப்பிடப்பட வேண்டும். தமிழ் மொழியில் பல்வகை அறிவுத் துறை நூல்களை வெளியிட வேண்டும், என்பது வேறு; தமிழைப் பயிற்று மொழியாக்குவது வேறு; இரண்டாவது குறிக்கோளில் தயக்கமோ, எதிர்ப்போ உள்ளவர்கள் கூட, முதற் குறிக்கோளை எதிர்ப்பதற்கில்லை. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்றாலும், முன்னது தனியாகவும் கவனிக்கப்படலாம்.

பயிற்றுமொழி தனியாக எடுத்து ஆராயப்பட வேண்டிய ஒன்று. தாய்மொழி, கல்வி மொழியாகவும் இருக்க வேண்டும் என்பதை மறுப்பார் யாருமே இல்லை. உலகு முழுவதும் ஒப்புக் கொண்ட ஒன்று. இதை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் பெரும்பாலும் கல்விக் கொள்கைகளின் அடிப்படையில் எழுவன அல்ல. அவை, மற்ற அடிப்படைகளையுடையவை. எனவே, பயிற்றுமொழிச் சிக்கல்பற்றித் தனியே ஆய்வது பொருந்தும்.

7. எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் வளர்ச்சிக்குத் தேவையான முதல்படி "எழுத்துச் சீர்திருத்தம்" எனினும் அதன் சிக்கல் கருதி, அதில் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடு கருதி, இறுதியாக அது பற்றிப் பேசப்படுகிறது. "எழுத்துச் சீர்திருத்தம்" புதிய தலைப்பு அல்ல. 1934-ல் சென்னையில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் தமிழெழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்காக ஒரு குழுவும் நிறுவப்பட்டது. 1941-ல், மதுரையில் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஒரு குழுவும் நிறுவப்பட்டது. 1948-ல், சென்னையில், நடந்த அகிலத் தமிழர் மாநாட்டிலும் இதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒரு குழுவும் நிறுவப்பட்டது.

எனவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பல ஆண்டுகள் முன்பே தேவையென ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. வழக்கம்போல, நாம் செய்யும் திறன் இன்றி, அல்லது அதற்கான தெளிவின்றி, அல்லது துணிவின்றி, ஒத்திப்போட்டு வரும் ஒன்று.

செயல் வீரரான பெரியாரவர்கள், பல ஆண்டுகளாகவே தமக்குச் சரி என்று பட்ட அளவில் ஒரு சில திருத்தங்களைச் செய்து "விடுதலை இதழில்" பயன்படுத்தியும் வந்தார். அது அவருக்குப் பின்னும் தொடர்கிறது.

அண்மைக் காலத்தில் கூட ஒரு குழு, இதற்கான சில பரிந்துரைகளை, முந்தைய அரசுக்குப் படைத்திருக்கிறது என்று கூறப்படுகிறது. முடிவு எதுவும் தென்படவில்லை.

மொழி வளர்ச்சியின் பலதுறைகளைப் போலவே, இதுவும் தேவை உணரப்பட்டும், எடுத்துச் சொல்லப்பட்டும் செயல் தேங்கிக் கிடக்கிறது. தமிழ் வளர்ச்சி பற்றிய நமது ஆர்வத்தில் உண்மையிருக்குமானால், ஒரு சில முக்கியமான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதில் உறுதியிருக்குமானால், நாம் கவனிக்க வேண்டிய முதல் பிரச்சினை இதுவாகும்.

எழுத்துச் சீர்திருத்தத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய நடைமுறைகளை ஆயுமுன், ஒருமொழியில் எழுத்தின் இடம் என்ன? அது எந்த அளவிற்கு நிரந்தரமானது; எந்த அளவிற்கு மாறக்கூடியது என்பதை எண்ண வேண்டும். ஒருமொழிக்கு அடிப்படையானது ஒலி; எழுத்து அல்ல. ஒரு மொழிக்கு அமைந்துள்ள ஒலிகட்கு, நாம் கொடுக்கும் "வரி வடிவம்" அல்லது "குறியீடு" தான் எழுத்து. இந்தக் குறியீடுகள், எல்லா மொழிகளிலும், காலத்துக்குக் காலம் மாறி வந்திருக்கிறது. இந்த மாற்றம் தமிழின் வரிவடிவத்தில் கணிசமாக ஏற்பட்டிருக்கிறது. வள்ளுவர் எழுதிய வரிவடிவத்தில் கம்பர் எழுதவில்லை. கம்பர் எழுதிய வரிவடிவத்தில் இன்று நாம் எழுதவில்லை. நாம் இன்று பயன்படுத்தும் வரிவடிவம் 19வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட இதே மாதிரி இருக்கவில்லை. இப்போதைய வரிவடிவம் வீரமா முனிவர் அவர்களால் செய்யப்பட்ட பல மாறுதல்களை உள்ளடக்கியதாகும்.

Script for All Sound ?

இலக்கியத்திலும் சரி, தத்துவத்துறைகளிலும் சரி, அறிவியல் தொழில் நுட்பத் துறைகளிலும் சரி, இன்று உலகில் தலைசிறந்த மொழிகளில் ஒன்றாகத் திகழ்வது ஜெர்மன் மொழி. அண்மைக் காலம் வரை, ஜெர்மன் மொழி காத்திக் வரிவடிவத்தில் (Gothic Script) எழுதப்பட்டு வந்தது. பின்னர் ஜெர்மானிய மக்கள் தங்கள்மொழிக்கு ரோமன் (Roman Script) வரிவடிவத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். இன்று, ரோமன் வரிவடிவம்தான் ஜெர்மன் மொழிக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் அம்மொழி பெரும் அளவில் பயன் பெற்றதாக முதலில் வரிவடிவ மாற்றத்தை எதிர்த்தவர்களே ஒப்புக் கொண்டனர். ஜெர்மன் மொழியின் தனித்தன்மையோ, சிறப்போ, இதனால் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. ஆனால் அதன் பயனும், வளர்ச்சியும், பெரிதும் உயர்ந்திருக்கிறது.

ஆசியப் பகுதியில் வாழும் மக்களில் ஜப்பானியர் பழைய பண்பாடும் பாரம்பரியமும் கொண்டவர்கள். தங்கள் பண்பாட்டைக் கட்டிக் காத்து வருபவர்கள். அதில் பெருமை கொண்டவர்கள். நாம் மகாராஜாக்களைத் துறந்து மக்களாட்சிக்கு வந்து ஆண்டுகள் பலவாயின. தமது அரசர்கள் சிம்மாதனம் இழந்ததற்காக இந்தியக் குடிமக்கள் யாரும் அவ்வளவாக கண்ணீர் சிந்தவில்லை. ஆனால் ஜப்பானியர் இன்னும் தங்கள் அரசுப் பீடத்தைமதித்துப் போற்றி வருகிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் கடந்த கால ஏற்பாடுகளைக் கட்டிக்காத்து வருபவர்கள். அவர்கள் மொழி, படுக்கையாக இல்லாமல் குத்துவடிவில் எழுதப்படுவது. இம்முறை இலக்கியங்கட்கு ஏற்றதாயினும், அறிவியல், தொழிலியலுக்கு ஏற்றதாக இல்லை. எனவே, அறிவியல், தொழிலியல் நூல்கள், பதிப்புகள் ஜப்பானிய மொழியில் இன்று படுக்கையாகவே எழுதப்படுகின்றன.

பொதுவாக முன்னேறியுள்ள நாடுகள், தங்கள் பயணப் பாதையில் அப்போதைக்கப்போது தேவையான மாற்றங்களைத் தங்களது மொழியிலும், சமுதாய நடைமுறைகளிலும் செய்து வந்திருக்கிறார்கள். அப்படிச் செய்ததன் மூலம்தான் முன்னேறியிருக்கிறார்கள். "மாற்றமில்லையேல் வளர்ச்சி இல்லை" என்பது பொது விதி. இதற்கு விலக்கில்லை.

தமிழ் வரிவடிவத்தில் மாற்றம் வேண்டுமென்பது, மாற்றத்தை எளிதில் ஏற்கத் தயங்கும் தமிழ்ப் புலவர் பெருமக்களே ஏற்றுக்கொண்ட ஒன்று. அதற்கான வாதங்களை மீண்டும் கூறுவது தேவையில்லையென்றாலும் சில முக்கிய கூறுபாடுகளை இங்கு வலியுறுத்துவது பொருத்தமானதாகும்.

0 ஒருமொழியில் ஒலிகள் அறுதி செய்யப்பட்டவை. வரிவடிவம் இந்த ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடுகள். எனவே, மொழிக்கு "ஒலி" தான் அடிப்படையே தவிர, எழுத்துக்கள் அல்ல. எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் மாறி வருபவை.

0 ஒலிகளுக்காக நாம் அமைக்கும் குறியீடுகள் எளிய வடிவமும், முடிந்த அளவு குறைந்த எண்ணிக்கையும் கொண்டதாக இருக்க வேண்டும். அவை எண்ணிக்கையில் அதிகமானாலும், வரிவடிவம் சிக்கல் நிறைந்ததாக இருந்தாலும், கற்பதில் சிரமமும், கால விரையமும் ஏற்படும்.

இடவிரயமும்

0 மனித சமுதாயத்தில் கல்வியையும், அறிவையும் பரப்புவதில் அச்சுயந்திரம் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. எழுத்தாணி கொண்டு ஓலையிலும் பின்னர் காகிதங்களிலும் எழுதுவதற்கு ஏற்றதாக இருந்த ஒரு வரிவடிவம், அச்சுக்கும் அப்படியே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

0 பழங்காலத்தில் கல்வியென்பதே, எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதும், பின்னர் சில இலக்கிய, இலக்கண நூல்களை கற்பதும் தான் என்ற அளவிலேயே பெரும்பாலும் இருந்தது. அதாவது கல்வியென்றாலே "மொழிக்கல்வி" என்பது தான். ஆனால், இன்று மொழியைக் கற்பதே முடிவான குறிக்கோள் அல்ல. அது மற்ற அறிவுத் துறைகளைக் கற்பதற்கு முதல் படியாகும். எனவே, முன்புபோல, நாம் மொழியறிவு பெறுவதற்கு மட்டுமே நீண்ட காலத்தைச் செலவிட முடியாது. அப்படிச் செலவிடுவது, நமது மற்ற வளர்ச்சிகளைச் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ உறுதியாகப் பாதிக்கும்.

0 பண்டைக் காலத்தில், கல்வி ஒரு சமுதாயத்தில் ஒரு சிலர், அதுவும் மிகச் சிலர், மட்டுமே பெறும் ஒன்றாக இருந்தது. அது அவசியத் தேவை என்ற நிலை அரசர்கட்குக் கூட இருக்கவில்லை. உலகின் சாம்ராஜ்யங்கட்குத் தலைமை தாங்கிய பேரரசருள் அக்பர் தலையாயவர். அரச தாரகைகளில் வெள்ளி மீனாக விளங்கியவர். அவர் ஒரு தற்குறி. எழுதப் படிக்கத் தெரியாதவர். அது அவருடைய பெருமைக்கு இழுக்காக அமையவில்லை. கல்வி பண்டைய சமுதாயத்தில் ஒரு பொருளாதாரத் தேவை—யாகவோ, சமுதாயத் தேவையாகவோ இருக்கவில்லை. ஆயிரத்திற்கு ஒருவர், இருவர் கற்ற சமுதாயத்தில் எழுத்துக்களைக் கற்கவும் எழுதவும் அதிகக் காலம் செலவழிந்தால் சமுதாய அளவில் அதனால் ஏற்படும் நட்டம் கணிசமானதல்ல. ஆனால் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற தத்துவம் (Universal Education) செயற்படுத்தப்படும் இந்த நூற்றாண்டில், ஒவ்வொரு ஆணும், பெண்ணும் எழுத்துக்களைக் கற்க அதிக நாட்கள், தலைமுறை தலைமுறையாகச் செலவிட நேர்ந்தால் அது மிகுந்த விரய—மாகும். அது தவிர்க்க முடியாதது என்றால், ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் தவிர்க்க முடியுமெனின், அதைச் செய்யத் தயங்குவதற்கு நியாயமே இல்லை. மாபெரும் வாழ்வு ஊனாலும், பொருளாலும் ஆனதல்ல. அது காலத்தால் ஆனது. காலத்தை விரயமாக்கும் இனம், விரயமாக்கும் வகையில் சில அமைப்புக்களை வளர்த்துக் கொள்ளும் இனம், வளர்ச்சிப் பயணத்தில் பின்தங்க நேரிடும்.

0 இந்தியாவில், முதன் முதலாக நூல்கள் அச்சிடப்பட்டது தமிழில்தான். அது தமிழகத்தில் நடைபெறவில்லை. கோவாவில் அச்சிடப்பட்டது. அன்று நூல்களை அச்சிட்ட கிறித்தவப் பாதிரிகள், கோவாவில் மராத்திய மொழியையோ, இந்தியையோ, கன்னடத்தையோ, தேர்ந்தெடுக்காமல், தமிழைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், தமிழ் மீது ஏற்பட்ட பற்று அல்ல. மற்ற இந்திய மொழிகளோடு ஒப்பிடும்போது தமிழ் வரிவடிவம் எளியது என்பதுதான். <u>எளிமை எங்கிருப்பினும் அதில் ஒரு ஏற்றம் இருக்கிறது. அழகு இருக்கிறது. ஈர்ப்பு இருக்கிறது.</u>

0 இன்று நாம் தட்டச்சை (Typewriter) பெருமளவில் பயன்படுத்துகிறோம். நமது சமுதாயம் வளர, வளர இவை பெருகும். ஆனால் தட்டச்சில் நமது மொழியின் வேகம் ஆங்கிலத்தோடு ஒப்பிடத் தகுந்ததாக இல்லை. ஆங்கிலத்தில் மேல்நிலை தேர்வுக்கு வேகம் ஒரு நிமிடத்திற்கு 45 சொற்கள்/225 தட்டுக்கள். அதே நிலைத் தேர்விற்கு வேகம் 41 சொற்கள் (Words) /205 தட்டுக்கள் (Strokes) தமிழ் தட்டச்சர் ஒவ்வொருவருடைய நேரமும் விரயமாகிறது. இது தொடர்ந்து இன்னும் அதிக அளவில் ஆகக் கூடிய கால விரயமாகும். ஒருமனித சமுதாயத்தின் ஈடு இணையில்லாத செல்வம் "காலம்". அதை வீணாக்கும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும், கட்டிக்காக்கும் சமுதாயம் தனது கால்கட்டுக்குத் தானே தளை இட்டுக்கொள்கிறது.

எழுத்து சீர்த்திருத்தம் தேவை என்பதை நாம் ஒப்புக் கொள்வோமானால், அதை எப்படிச் செய்வது என்ற கேள்வி எழுகிறது. இரண்டு வழிகளைக் கையாளலாம்.

1. இப்பொழுதிருக்கிற வரிவடிவத்தில் சில தேவையான மாற்றங்களைச் செய்வது.
2. புது வரிவடிவம் ஒன்றை ஏற்றுக் கொள்வது.

இவற்றின் நிறை குறைகளை மேலே ஆய்வோம்.

8. இருக்கும் வரிவடிவத்தைச் சீர்செய்வது

இன்று நமக்கு 12 உயிர் எழுத்துக்கள், ஒரு ஆய்தம். 18 மெய்யெழுத்துக்கள், 216 உயிர்மெய்யெழுத்துக்கள், ஆக 247 ஒலி எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றால் குறிப்பிடப்படும் ஒலிகட்குப் பயன்படுத்தப்படும் வரியெழுத்துக்கள் 131. இவை அச்சடிப்பதற்கும் தட்டச்சுச் செய்வதற்கும் உதவியாக இல்லை. இதுபற்றிப் புலவர் குழந்தை அவர்கள் கூற்றுப் பின்வருமாறு:

> "....பன்னீருயிரும், ஒரு மெய்யோடு கூடியன 12 உயிர்மெய் எழுத்துக்களைச் சொல்லத் தெரிந்து கொண்டால், அப்படியே ஏனை உயிர்மெய்யெழுத்துக்களைச் சொல்லத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் 131 வடிவெழுத்துக்களையும் கற்றுக் கொள்வதற்கு இளங் குழந்தைகட்குப் பல மாதங்கள் ஆகின்றன.... தமிழ் எழுத்துப் பெட்டியில் அறைகள் மிகுதியாக உள்ளமையின் அச்சுக் கோத்துப் பழகவும் நாளாகிறது. அச்செழுத்துக்கள் வார்ப்பதும் கடுமையாக உள்ளது....தட்டெழுத்துப் பொறி செய்யக் கடுமையாக இருப்பதோடு விலை மிகுதியும், அச்சடித்துப் பழகக் காலமும் ஆகின்றன. அச்சடிப்பதும் எளிதாக இல்லை. இதனால், அரசியல், அலுவலகங்கள், தொழிலகங்கள், வணிக மனை முதலியவற்றில் தமிழ் மொழி தன்னிறைவு பெறாமல் இருந்து வருகிறது".

தமிழில் செய்ய வேண்டிய எழுத்துச் சீர்திருத்தத்தின் ஒரு சிறு பகுதியைப் பெரியாரவர்கள் முன்பே செய்து விட்டார்கள். மீதமுள்ள செய்ய வேண்டிய மாற்றங்கள் செய்யப்பட்டு, சீர்திருத்தப்பட்ட வரிவடிவம் அரசின் ஒப்புதலையும் பெறுமானால், அது மிக எளிதில் பழக்கத்திற்கு வந்துவிடும்.

இந்தச் சீர்திருத்தத்தை இரண்டு கட்டங்களாகச் (Steps) செய்யலாம்:

0 முதற்கட்டம்

1. பெரியாரவர்கள் செய்த சீர்திருத்தத்தின் அடிப்படையை ஏற்றுக் கொண்டு, அதற்கு மேலாக 'உ' கரம், 'ஊ' காரம் இரண்டிற்கும், இகரம், ஈகாரம், எகரம், ஐகாரம் போல உயிர்மெய் எழுத்துகட்குப் பொதுக் குறியீடுகளைக் குறிலுக்கும், நெடிலுக்கும் பயன்படுத்துவது. சான்றாக, 'கு' 'கூ' ஆகியவற்றை "கு, கூ" என எழுதலாம். அதுபோலவே மற்ற மெய்யெழுத்துக்கட்கும் மேற்கண்ட குறியீடுகளை உகரத்திற்கும், ஊகாரத்திற்கும் பயன்படுத்தலாம். மேலே கண்ட "ு, ூ, குறியீடுகள் திருப்தியில்லையென்றால், ஏற்ற இரண்டைத் தேர்ந்தெடுக்கலாம்.

2. ஐ, ஔ இரண்டிற்கும், 'அய்', 'அவ்' என்பதை பெரியார் அவர்கள் புகுத்தியதை, உயிர்மெய்யெழுத்துகட்கும் பயன்படுத்துவது. அதாவது 'கௌ' என்பதை 'கவ்' என்றும், 'சௌ' என்பதை 'சவ்' என்றும் எழுதுவது.

0 இரண்டாவது கட்டம்

உயிரெழுத்துக்களின் வடிவம், உயிர்மெய்யெழுத்துக்களின் வடிவம் ஆகியவற்றில் இன்னும் சில மாறுதல்கள் செய்வதன் மூலம், வரிவடிவத்தைக் கிட்டத்தட்ட 30க்கு குறைப்பது. இருக்கின்ற வரிவடிவத்தில் பெருத்த மாறுதல் இல்லாமலேயே இதைச் செய்துவிட இயலும்.

இந்தத் திருத்தங்களைப் படிப்படியாகச் செய்வதா, அல்லது ஒரே தடவையில் செய்து முடிப்பதா என்பது எண்ண வேண்டிய ஒன்று. நாம், நமது முன்னேற்றத்தைக் கருதி, தொலை நோக்கோடு, எந்த அளவிற்கு மாறுதல்கட்குச் சமைவாயிருக்கிறோம் என்பதைப் பொறுத்தது.

இதில் ஒரு ஒற்றுமை கண்டு, நடைமுறைப் படுத்துவதில் தாண்ட முடியாத தடைகள் இருக்கும் என அஞ்ச வேண்டுவதில்லை. 'கட்சி கடந்த' ஒரு செயல்முறை மூலம் இதைச் செயற் படுத்த வேண்டும். முன்னேற்பாடுகளை அரசு செய்யலாம். முடிவு காணுவதைப் பல கட்சியினரின் பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு குழுவுக்கு விட்டுவிட வேண்டும். இக்குழு அரசியல் தலைவர்களைக் கொண்ட குழுவா, அரசியல் சார்பற்ற அறிஞர்கள் குழுவா என்பது சிந்திக்கத்தக்க ஒன்று. தமிழ் ஆட்சி மொழியாகவும் பயன்படும் இலங்கை, சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளின் அறிஞர்கள் சிலரையும் அழைப்பது இயலுமாயின் நல்லது. அறிஞர் குழுவின் துணை நாடப்பட்டாலும், முடிவில் பொறுப்பு அரசியல் தலைவர்களுடையதாக இருக்க வேண்டும். பின்னர் நடைமுறைப்படுத்துவதை அரசு ஏற்கலாம்.

9. புது வரிவடிவம்

வரிவடிவத்தை மாற்றுவது என்ற முடிவுக்கு வந்தபின் சிறு மாற்றங்களைச் செய்வதைவிட பல்வகையிலும் பயன்தரும் மாற்றம் எதுவோ, அதையே செய்ய எண்ணுவதும் ஏற்ற ஒன்றே. பொதுவாக நமது வரிவடிவம் சிக்கலானது. எண்ணிக்கையைக் குறைத்தால் கூட, எழுத்து

வடிவம் எளிமையானதல்ல. வளைவுகள், சுழிகள், கொம்புகள், நிறைய உள்ளன. ஒரு குழந்தை ஆங்கில எழுத்தான 'A' எழுதுவது போல 'அ' எழுத இயலாது. ஆங்கில எழுத்துக்களை எழுதுவதற்கு வேண்டிய வயதை விடக் குறைந்தது ஓராண்டு வயது அதிகமிருந்தால்தான் ஒரு குழந்தை தமிழ் எழுத்தை எழுத முடியும்.

ஒரு மொழிக்கு, ஒலிதான் அடிப்படை, வரிவடிவம் அடிப்படையல்ல என்பதை ஏற்றபின், அந்த வரிவடிவத்தை எவ்வளவு எளிதாக அமைக்க முடியுமோ, அவ்வளவு எளிதாக அமைத்துக் கொள்வதுதான் தொலைநோக்கும், முன்னேற்றப் பாதையுமாகும். இப்பொழுது பயன்படுத்தப்படும் வரிவடிவங்களில், விநோபாபாவே போன்றவர்கள் தேவநாகரி வரிவடிவத்தை இந்திய மொழிகள் அனைத்திற்கும் பரிந்துரைத்திருக்கிறார்கள். இராஜாஜி, பெரியார் போன்றவர்கள் தமிழுக்கு ரோமன் எழுத்துக்களை பயன்படுத்தலாம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். தேவநாகரி எழுத்து, தமிழ் வரிவடிவத்தைவிடச் சிக்கலானதும், அதிக எழுத்துக்களைக் கொண்டதுமாகும். எனவே, தமிழ் வரிவடிவமே காலவிரயத்திற்கு காரணமாக இருக்கிறது என்று கருதும் நாம் அதைவிடச் சிக்கலான இன்னொரு வரிவடிவத்தை ஏற்பது பொருத்தமானதல்ல. வரலாற்று அடிப்படையில், பண்பாட்டு அடிப்படையில், உணர்ச்சி அடிப்படையில் எழும் பல தயக்கங்களை விட்டு, "பயன்" என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, தேவநாகரி வரிவடிவத்தை நாம் கருதுவதற்கில்லை. எனவே, அடுத்து நாம் ஆய வேண்டியது ரோமன் வரிவடிவம்.

ரோமன் வரிவடிவம் நாம் அறிந்த ஒன்று. ஐரோப்பாவில் தமிழ் நூல் முதலில் ரோமன் வரிவடிவத்தில்தான் பதிப்பிக்கப்பட்டது. இன்றும் இராணுவத்தில் இந்திமொழி ரோமன் வரிவடிவத்தில் தான் கற்பிக்கப்படுகிறது. தமிழ்ப் பெயர்களை எழுத, அலுவலகங்களில் கடைகளில் இன்னும் பல சூழ்நிலைகளில் நாம் ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்துகிறோம்.

ரோமன் வரிவடிவத்தைப் பற்றிப் பேசும்பொழுது, பலர் உச்சரிப்புச் சிக்கலை எழுப்பலாம். இது ஆங்கிலத்தில் இருக்கும் உச்சரிப்பு முறையின் அடிப்படையில் எழும் அச்சமாகும். ஆங்கிலத்தில் இன்று நாம் காணும் உச்சரிப்புக் குறைபாடுகள், அந்த மொழி அமைப்பின் குறைபாடே தவிர, வரிவடிவத்தின் குறைபாடல்ல. ஜெர்மன் மொழி, ரோமன் எழுத்தில் தான் எழுதப்படுகிறது. சொற்கள் எழுதப்படுவதற்கும், உச்சரிக்கும் முறைக்கும், தமிழைவிடச் சற்று அதிகமான தொடர்பு ஜெர்மன் மொழியில் இருக்கிறது. எனவே, ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதன்மூலம் உச்சரிப்பில் சிக்கல் எதுவும் ஏற்படாது. இருபத்தாறு எழுத்துக்கள் போதா. இன்னும் சில, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஜெர்மன் மொழியில் மூன்று எழுத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள். தமிழுக்கு, நான்கு அல்லது ஐந்து தேவைப்படலாம். அதற்கும் இருக்கின்ற ரோமன் எழுத்துக்களுள் சிலவற்றிற்கு, சில குறியீடுகளைச் சேர்த்துப் பயன் படுத்தலாம்.

ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மை, தீமைகளை ஆய்வது, ஒரு முடிவுக்கு வருவதற்கு முதற்படியாகும். முதலில், நன்மைகளைக் கவனிப்போம்.

- ரோமன் வரிவடிவம் எழுதுவதற்கும், கற்பதற்கும் மிக எளியது. இன்று ஆங்கிலத்திற்கு, நான்கு வகை எழுத்துக்கள் உள்ளன. தமிழுக்கு ஒருவகை மட்டுமே போதுமானது. எனவே வரிவடிவம் சுமார் 30 எழுத்துகட்குள் அடங்கிவிடும்.

- ஆங்கிலம் இன்று உலக மொழி; அறிவுத்துறை மொழியும் அஃதே. எனவே, இந்த விஞ்ஞான யுகத்தில் ஆங்கிலத்தை, நமது சமுதாயத்தில் கணிசமான பகுதியினர் என்றுமே கற்றாக வேண்டும். எனவே, இரு வரிவடிவங்களைக் கற்கும் தேவை குறையும். இன்றைய மைய அரசின் மும்மொழிக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் கூட, தமிழர்கள் மூன்று வரிவடிவங்களை கற்பதன் சுமை குறையும்.

- இன்று மற்றைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஏராளமான கருவிகளையும், பொறிகளையும் நாம் பயன்படுத்துகிறோம். நாமும், அப்படிப்பட்டவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்கு பயன்படுத்தப்படுவது, அரேபிய எண்கள், ரோமன் வரிவடிவம். எனவே வணிகத் துறைகளில் இந்த வரிவடிவத்தைப் பெருமளவு பயன்படுத்தியாக வேண்டும். அதுவே பொது வரிவடிவமாயின், பணி எளிதாகும்.

2

0 ஆங்கிலம், தமிழ் இரண்டிற்கும் ஒரே தட்டச்சு, ஒரே அச்சு ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். உலகின் எந்தப் பகுதியிலும் தமிழ்த் தட்டச்சும் தமிழ்ப் பதிப்பீடும் எளிதாகி விடும். இது தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும்.

0 இன்று, இந்தியாவில் ஒரு மொழியினர் மற்றொரு மொழியினைக் கற்பதற்கு, இடைஞ்சலாயிருப்பது வரிவடிவம். மொழிகளில் இருக்கும் ஒருமைப்பாட்டை, வரிவடிவம் மறைத்து நிற்கிறது. தமிழ் ரோமன் வரிவடிவத்தில் எழுதப்பட்டால், அதைக் கற்பவர் தொகை மிக விரைவில் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் அதிகரிக்கும். தமிழ்க் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் இது பெருத்த ஊக்கமும், புத்துயிரும் அளிக்கும்.

0 இன்று தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகள் தனித்தனியாக நிற்பதற்கே பெரும் காரணம் வரிவடிவம்தான். இந்தி மொழியை எடுத்துக் கொள்வோமேயானால், அது பல வழக்கு மொழிகளைத் தன்னுள் கொண்டது. அவற்றுள் கடிபோலி, மைதிலி, பாஜ்போரி ஆகிய குடும்பங்கள் முக்கியமானவை. இவற்றில் ஒரு மொழி பேசுவோருக்கு இன்னொரு மொழி புரியாது. இவற்றின் இடையில் உள்ள வேறுபாடு, தமிழ், மலையாளம் போன்ற மொழிகட்கு இடையிலிருக்கும் வேறுபாட்டைவிட அதிகம். இருந்தும், இன்று இந்தி மொழி என்ற ஒரு மொழி உருவாவதற்கும், அது ஒரு மொழி போலத் தோற்றமளிப்பதற்கும், பொது வரிவடிவமும், இலக்கிய வழக்கும்தான் காரணம்.

0 தமிழ், ரோமன் வரிவடிவத்தில் எழுதப்படுமானால், பொறியியல், மருத்துவம் போன்ற அறிவுத்துறைகளில் தமிழில் வெளியிடப்படும் நூல்கள், தென்னிந்தியா முழுவதும் பயன்படுத்தப்படும். பொதுவாக, அறிவியல், பொறியியல் போன்ற துறைகளில் மொழிக் கடுமை குறைவு. திராவிட மொழிக் குடும்பத்தினர், இந்தத் துறைகளில் தமிழ் நூலைப் படித்துப் புரிந்து கொள்வது மிகவும் இயன்ற ஒன்றேயாகும்.

0 நம்மைப் பார்த்து, மற்ற திராவிட மொழிக் குடும்பத்தினரும் ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்துவார்களாயின், தமிழின் தூய்மையும், அதன் அடிப்படையும், வளரப் பெருந்துணை செய்யும். அப்படிப்பட்ட விளைவுகளை நாம் எதிர்பார்க்கலாம்: அவை நடந்தால் பெரும் பயன் அடைவது தமிழேயாகும்.

0 அறிவுத்துறைகளில், ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் வெளியிடப்படுவது பற்றி, முன்பே குறிப்பிட்டோம். இத்துறைகளில் நூல்களை வெளியிட மரபுச் சொற்கள் மட்டும் போதா. ஏராளமான குறியீடுகள், எண்ணிறந்த Formula க்கள் தேவைப்படுகின்றன. இவற்றை, அறிவியல், தொழிலியல் நூல்களில் பயன்படுத்துவதற்கு ரோமன் வரிவடிவம் மிகச் சாதகமாக அமையும்.

இந்தத் துறைகளில் நூல்கள் வெளிவருவதற்கும், உலகு ஒப்புக்கொண்ட பல பொதுக் குறியீடுகளை, Formula க்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கும், இவ்வரிவடிவம் ஏற்றதாக அமையும். பொதுவாக அறிவியல், தொழிலியல் துறைகளில் தமிழ் வளரப் பெருந்துணையாக இவ்வரிவடிவம் அமையும்.

0 தமிழகத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தோர் தொகை 1971 கணக்கெடுப்புப்படி 39 சதவிகிதம். இன்றும் சுமார் 60 சதவிகிதத்தினர் தற்குறிகளாகவே உள்ளனர். இந்த நிலையை நாம் விரைவில் மாற்றியாக வேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, கல்வி இன்றியமையாதது. தாய் மொழியைப் பொறுத்தவரை, எழுதப்படிக்கத் தெரிந்தவர் கட்கும், தெரியாதவர்கட்கும் இடையில் நிற்பது வரிவடிவம் தான். ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்துவோமானால் கல்விப் பளு மிகவும் குறையும். கற்பது பெரிதும் விரைவு படுத்தப்படும்.

0 இன்று மலேயா, இந்தோனேஉசியா போன்ற நாடுகளில் புத்தகக்கடைகளில் நுழைவோமாயின் பலவகை அறிவுத் துறைகளில் ஏராளமான புத்தகங்கள் அந்த மொழிகளில் அடுக்கடுக்காக காணப்படுகின்றன. அவர்கள் ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தியிருப்பதும் இவ்வளர்ச்சிக்கு ஒரு காரணம்.

0 ரோமன் வரிவடிம் பயன்படுத்தப்படுமானால், தமிழுக்கு அதன் முன்னேற்றப் பயணத்தில் 'இறக்கை'களைக் கொடுத்தது போன்ற மாற்றம் ஏற்படுவது உறுதி.

0 சீன மொழிக்கு ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவது பற்றிய திட்டம், சீன அரசால் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுவது நாம் கவனிக்கத்தக்கது.

அடுத்து, ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி ஆராய்வோம். தீமைகள் என்று அறுதியிட்டு சொல்லக் கூடிய எதுவும் தென்படாவிடினும் கீழ்க்கண்ட வினாக்களை நாம் எண்ணியாக வேண்டும்:

0 ஏராளமான தமிழ் நூல்கள், சுவடிகள் இன்றைய வரிவடிவத்தில் உள்ளன. இவற்றைப் புது வரிவடிவத்தில் பதிப்பிக்க முடியுமா? பதிப்பிக்க முயல்வது பெரும் செலவுக்கும், கால விரயத்துக்கும் காரணமாகிவிடும்.

0 தமிழ் உலகின் பல பகுதிகளில் இன்று பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. அவர்கள் எல்லோருமே இந்தப் புது வரிவடிவத்தைப் பயன்படுத்துவார்கள் என்று கூறுவதற்கில்லை. எனவே, தமிழ் மக்களிடையே வரிவடிவத்தி-லிருக்கும் தொடர்புக்கு ஊறு நேர்ந்துவிடக்கூடும்.

0 நம்முடைய வரிவடிவம் என ஒன்று இல்லாது போய் விடும்.

0 ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவது, பிற மொழிச் சொற்கள் தமிழில் அதிகமாகக் கலப்பதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும்.

மேற்கூறிய நான்கில், முதலிரண்டும் முக்கியமானவை. அவற்றைக் கவனித்தாக வேண்டும். பொதுவாக நாம் ரோமன் வரி வடிவத்தைப் பயன்படுத்துவது பற்றிக் கூறும்பொழுது, நாளைக்கே நமது இன்றைய வரிவடிவத்தை உதறித் தள்ளிவிட்டு, புது வரிவடிவத்தைப் புகுத்திவிட வேண்டுமென்று கூறவில்லை. இது ஒரு நீண்ட காலத் திட்டமாகவே எண்ணப்படவேண்டும்.

இப்பொழுது, நாம் 10+2 என்ற பன்னிரண்டு ஆண்டுப் பள்ளிக் கல்வி முறையை அமுல் நடத்த இருக்கிறோம். பள்ளிப் படிப்பு முடியும்வரை தமிழ் வரிவடிவம் நாம் முதலில் சொன்ன மாறுதல்களோடு பயன்படுத்தப்படலாம். பல்கலைக் கழக மட்டத்தில் அறிவியல், தொழிலியல் போன்ற அறிவுத்துறைகளில் மட்டும், தமிழ் நூல்கள் ரோமன் எழுத்துக்களில் வெளியிடப்படலாம். பல்கலைக் கழகத்திற்கு வரும் எல்லோரும் ஆங்கிலம் கற்றவர்களானமையின், வரிவடிவத்தில் ஏற்படும் மாற்றம் எந்தச் சிரமத்தையும் கொடுக்காது. இந்த ஏற்பாடு, நீண்ட காலம் தொடர்ந்து செயல்படுத்தப்படலாம். நாளாவட்டத்தில் ஒன்றின் பயன் வளரும். மற்றொன்றின் பயன் குறுகும். அதைக் காலத்தின் கையில் விட்டுவிடலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் மற்ற நாடுகளில் தமிழ் பேசுவோர், எழுதுவோரோடு கொண்டுள்ள தொடர்பு பற்றிய பிரச்சினை எழாது, பாதுகாக்கலாம். மேலும் ரோமன் எழுத்துக்கள் உலக அளவில் பரவியுள்ள காரணத்தால் படித்த தமிழர்கள் அனைவருக்கும் அது தெரிந்த வரிவடிவமாகவே இருக்கும்.

நமது வரிவடிவம் என ஒன்றுமில்லாது போய்விடும் என்பது அவ்வளவாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்று அல்ல. வரிவடிவம், பொதுவாக எல்லா மொழிகட்கும் காலத்துக்கு காலம் மாறியே

வந்திருக்கிறது. வள்ளுவர் எழுதிய வரிவடிவத்தில் கம்பர் எழுதவில்லை. கம்பர் எழுதிய வரிவடிவத்தில் கடந்த நூற்றாண்டுத் தமிழினம் எழுதவில்லை. வீரமா முனிவர் காலத்திற்குப் பிற்பட்ட வரிவடிவத்திற்கும், அதற்கு முன்னுள்ள வரிவடிவத்திற்கும் வேறுபாடுளது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"; "எண் என்ப, ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு", என்ற குறளில் வள்ளுவர் எண்ணை முதலில் வைத்துக் கூறினார். 'எண்' என்பது கணிதம் என்கிறார் பரிமேலழகர். அக்கணிதத்திற்கு அடிப்படையாக இருப்பது ~~இலக்கங்கள்~~ எண்கள் (Numbers). நாம் சில தமிழ் எழுத்துக்களை ~~இலக்கங்களின்~~ எண்களின் குறியீடுகளாகப் பயன்படுத்தி வந்தோம். இன்று அவற்றை விட்டு, "உலக ~~இலக்கங்கள்~~ எண்கள்" (International Numbers) எனப்படும் ~~இலக்கங்~~ எண்களைப் பயன்படுத்துகிறோம். நாம் மட்டும், "தமிழ் ~~இலக்கங்~~ எண்களைத்" தான் (Tamil Numerals) பயன்படுத்துவது என்ற பிடிவாதம் பிடித்திருந்தோமானால், கணிதத்தில் நாம் பெருக்கல், வகுத்தலுக்குமேல் முன்னேறியிருக்க முடியாது.

இப்பொழுது பயன்படுத்தப்படும் இலக்கங்கட்கு "உலக இலக்கங்கள் (International Numbers) அல்லது (Arabic Numerals) என்ற பெயர் வழங்கப்படுகிறது. உண்மையில் இவை இந்தியாவில் உருவாகி, அரேபிய நாடுகள் வழியாகப் பரவி, இன்று உலக முழுவதும் ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட இலக்கங்கள் ஆகும். உலகின் பல பகுதிகளில் வழங்கி வந்த எண் முறைகள் கைவிடப்பட்டுவிட்டன. ரோமப் பேரரசு பயன் படுத்திய ரோமன் எண்கள் இன்று ஒரு சில கடிகார அட்டைகளோடும், நூல்களிலும், கட்டுரைகளிலும், தலைப்பு, பத்திகட்கு இடப்படும் எண்களோடு நின்றுவிட்டன. எண்களுக்கு இந்தியா அளித்த பெருவரம் பூஜ்யம் '0' என்ற எண்ணும், தசாம்ச முறையும். இந்தச் சிறு மாற்றம், கணிதத்தில் எவ்வளவு பெரிய இமாலயப் புரட்சியை, மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அத்துறை நிபுணர்களே அறிவர். இது போன்ற மாற்றங்களை ஏற்றுக் கொள்வதால், ஒரு சமுதாயத்தின் பாரம் பரியமோ, பழமையின் வேர்களோ, இனத்தின் தனித்தன்மையோ அழிந்து விடவில்லை.

அடுத்து, பிறமொழிச் சொற்கள் கலப்பதைப் பற்றி பார்ப்போம். பிறமொழிச் சொற்கள் கலப்பதும், அதை எதிர்க்கும் "தூய்மை இயக்கமும்" உலகின் எல்லா மொழிகட்கும் பொதுவான கூறுபாடு. பிற மொழிச் சொற்களைச் சற்றுத் தாராளமாகவே ஏற்று வளர்ந்த ஆங்கிலத்தில்கூட, இப்படிப்பட்ட இயக்கங்கள் இருந்திருக்கின்றன. பிற மொழிச் சொற்களை ஒரு மொழிதேவையான அளவில் கடன் வாங்குவது தவிர்க்க முடியாதது. ஆனால் அதே சமயத்தில் 'தூய்மை இயக்கங்கள்' தேவையற்றவை என்றும் கூறிட முடியாது. எந்த ஒரு சித்தாந்தமும், நடைமுறையில் ஒரு நல்ல வரம்பை மீறும்பொழுது, எதிர்ப்புணர்ச்சிகள் தோன்றுகின்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட, பேசப்பட்ட, தமிழில் சராசரியாக கிட்டத்தட்ட 100க்கு 50 பிறமொழிச் சொற்கள், குறிப்பாக வடமொழிச் சொற்கள் இடம் பெற்றதாகக் கூறப் படுகிறது. அவற்றில் பல தேவையில்லாது பயன்படுத்தப்பட்டவை. நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்க, அவை புறக்கணிக்கப்பட்டு, அதே கருத்தை வெளியிடும் பிற சொற்கள் வலிந்து பயன் படுத்தப்பட்டன. தமிழை வளமாக்க உதவாது, இருக்கின்ற சொற்கள் மறைய ஏதுவான வழியாக இச்செயல் அமைந்தது. எனவே, இதற்கு எதிர்ப்பு எழுந்ததும், அது இயக்கமாகவே வளர்ந்ததும் இயற்கையே. இன்றைய தமிழில், ஏறத்தாழ 100க்கு 20 சொற்கள் அல்லது அதற்கும் சற்றுக் குறைவாகப் பிறமொழிச் சொற்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த விகிதம் இன்னும் குறையக் கூடும். ஆனால் என்றும் அந்த '20' குறைந்து '0'வாக மாறிவிடாது. மாற்றுவதற்கான முயற்சியும் வளர்ச்சிக்குத் துணை புரியாது.

தனித் தமிழ் பற்றி எண்ணும்பொழுது, "தனிமை" வேறு; "தனித்தன்மை" வேறு என்பதை வலியுறுத்திக் கொள்ள வேண்டும். ஒரு இனத்திற்கும், மொழிக்கும் 'தனித்தன்மை' உண்டு. அது, தேவைப்பட்ட வழி பாதுகாக்கப்படவேண்டும். நல்லது என்று பட்டால் வளர்க்கப்பட வேண்டும். அதற்காக ஒரு இனமோ, மொழியோ தன்னைத் தனிமைப்

படுத்திக் கொண்டுவிடக் கூடாது. உயிருள்ள எதுவும் தனித்தியங்குவதில்லை. இயங்க இயலாது. அது இயற்கையுமல்ல. தனித்தியங்கும் மொழிகள் உலகில் எதுவும் இல்லை. கடலூரில் பிறந்தவர், காஞ்சிபுரம் கூடச் செல்லாது, பெரும்பாலோர் அவரவர் பிறந்த சூழ்நிலைகளிலேயே வாழ்ந்து, மறைந்த காலத்திலேயே, 'திசைச் சொல்'லுக்கு இலக்கணம் கண்டது தமிழினம். உலகம் சுருங்கி, மானிடத்தின் உயர்வு விண்ணிலும், வெளியிலும் விரியும் இந்நாளில், நாம் நமது வாழ்வின் எந்தத் துறையிலும் ஆமைபோல் நமது கூரைக்குள் அடங்கி விடக்கூடாது.

"கன்னித்தன்மை"தான் தூய்மையுடையது என்பது இல்லை "தாய்மையும்" தூய்மையுடையதுதான். வளரும் இனத்தின் தூய்மை உணர்ச்சிகள் தாய்மையின் தன்மையினதாக இருக்கவேண்டும்.

கடந்த கால வரலாறு, இன்றைய நடைமுறை, இவை யனைத்திலும் மேலாக விற்பனர்கள் உலக அளவில் ஒப்புக் கொண்டுள்ள சித்தாந்தங்கள், ஆகிய அனைத்துக்கும் எதிரான, மாறான ஒரு பாதையில் நமது பயணமும், முயற்சியும் சென்றுவிடக்கூடாது. அது வெற்றி தராது, வீணாகிவிடும் என்ற காரணத்தால்.

பண்டை நாட்களில் படித்தோர், அதிலும் எழுதுவோர் மிகச் சிலரே இருந்தனர். அவர்கள் தங்கள் விருப்பத்திற்கும் வெறுப்பு கட்கும் ஏற்ப, எழுத்துத் தமிழை, உருவாக்குவது இயன்றதாக இருந்தது. அன்றைய சூழ்நிலையில் கற்றவர்கள், தமிழில் நூல்கள், கருத்துரைகள் எழுதிய சிலரில் கணிசமான விகிதத்தினர் வடமொழிச் சொற்களைப் பயன் படுத்தும் மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தனர். அதற்கான காரணங்கள் பல. அவற்றை, ஆய்வது, நாம் இப்பொழுது எடுத்துக் கொண்ட பணிக்குத் தேவையான ஒன்றல்ல. இன்றைய நிலைமையின் அடிப்படை வேறு. இன்று பரவலாகக் கல்வி அறிவு பெருகி, மொழி வளர்ச்சி பொது மக்கள் மன்றத்திற்கு வந்து விட்டது. இனி யாரும்

எளிதில் மொழிக்கு ஊறு செய்யும் கூறுபாடுகளைத் திணிக்க முடியாது. இது மணிப்பிரவாளக் கட்சிக்கும் பொருந்தும். தனித் தமிழ்க் கட்சிக்கும் பொருந்தும். இந்தப் பிரச்சினையில், வரிவடிவம் முழுக்க முழுக்கத் தொடர்பில்லாதது என்று கூறமுடியாவிட்டாலும், அதற்கு முக்கிய இடம் இல்லை. பிற சொற்கள் புகுவது, நாம் ஏற்றுக் கொள்ளும் ஒலியைப் பொறுத்தது தானே தவிர, எழுத்தைப் பொறுத்ததல்ல. இன்றும் பலர் ஸ, ஹ, க்ஷ, ஜ போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். சிலர் பயன்படுத்துவதில்லை. இந்த எழுத்துக்களால் குறிப்பிடப்படும் ஒலி வேண்டுவோர் ரோமன் வரிவடிவத்தில் அவற்றை அமைத்துக் கொள்ளலாம். வேண்டாதோர் இன்று போலவே அவற்றைப் பயன்படுத்தாது விட்டு விடலாம். இன்றுவரை வழக்கில் இல்லாத ஒலிகள் எதுவும் தமிழ் மொழியின் வழக்கத்தில் ரோமன் வரிவடிவத்தை ஏற்பதாலேயே தானாகக் குடியேறிவிடப் போவதில்லை.

10. முடிவுரை

மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு முக்கியமான, மிக உன்னதமான கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அநுபவங்கட்கும் ஒரு தொடர்பும் இல்லை. புது உலகம், புது உலகம் என்று நாம் சாதாரணமாக அடிக்கடி கூறிவந்திருக்கிறோம். முன்பு இந்தச் சொல் பெரும்பாலும் சம்பிரதாயத்-திற்காகப் பயன்படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே, ஒரு புது உலகம் உருவாகி வருகிறது. அதன் விளைவுகள் இன்றே நாம் மலைப்புறும் அளவில் இருக்கின்றன. எதிர்காலத்தில் இன்னும் நாம் வியந்து பிரமிக்கும் அளவில் இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிறையத் தென்படுகின்றன. இந்தக் கால வெள்ளத்தை அறியாது, படகின்றி, கப்பலின்றி, ஆற்றுப்படுகையில் உல்லாசமாக நடந்து கொண்டிருப்பவர்கள் அடித்துச் செல்லப்பட்டு விடுவார்கள். இது தவிர்க்க முடியாதது. "நாம் எத்தனையோ